ஒவ்வொரு மாணவரையும் சென்றடைக

Ontario

# Bullying (சீண்டுதல்)

## இதனை நிறுத்துவதற்கு நாம் யாவரும் உதவலாம்



ஆரம்ப, நடுநிலை பள்ளிக்கூட மாணவர்களின்
பெற்றோர்களுக்கு ஒரு வழிகாட்டி

இளவேனிற்காலம் 2011இல் புதுப்பிக்கப்பட்டது

சீண்டுதலின் விளைவுகள் பாடசாலை வளவைக் கடந்து செல்கின்றன. பெற்றோர் என்ற முறையில் நீங்கள் கவனிக்க வேண்டியவையும், செய்ய வேண்டியவையும், எங்கு உதவி பெறச் செல்லலாம் என்பனவும் இங்குள்ளன.

## சீண்டுதல் என்பது என்ன?

Ministry of Education (கல்வி அமைச்சு) சீண்டுதலை முறைப்படி பின்வருமாறு வரையறுக்கின்றது:

சீண்டுதல் என்பது ஒரு தனிநபரையோ அல்லது நபர்களையோ நோக்கி செலுத்தப்படுகின்ற ஒரு குறிப்பிடத்தக்க வகையான திரும்பத்திரும்பச் செய்யப்படும், விடாப்பிடியான, பலாத்காரமான நடத்தையாகும். இந்நடத்தையானது, மற்றொரு நபரின் உடல், உணர்வுகள், தன்மதிப்பு, அல்லது நற்பெயர் என்பனவற்றிற்கு அச்சம், வேதனை, மற்றும்/அல்லது பாதகம் விளைவிக்கும் (அல்லது விளைவிக்கக்கூடியதென்று அறியப்படவேண்டிய) நோக்கத்துடன் செய்யப்படுகின்றது. உண்மையான அல்லது உணரப்படுகின்ற அதிகாரச் சமமின்மை காணப்படும் தறுவாயில் சீண்டுதல் இடம்பெறுகின்றது.

கோட்பாடு/திட்ட Memorandum 144 (குறிப்பாணை 144) இலிருந்து சீண்டுதலின் வரையறை, Ministry of Education (கல்வி அமைச்சு)

## பாடசாலைகள் எவ்வாறு சீண்டுதலிற்கு பதிலளிக்கின்றன?

நேர்முகமாகவோ அல்லது இணையத்தினூடாகவோ, எங்கு இடம்பெற்றாலும், அடுத்தவரை சீண்டும் மாணவர்கள் பல்வேறான பின்விளைவுகளுக்காளாக ஏற்படலாம்.

Ontario (ஒன்டேரியோ) இன் முற்போந்துசெல்லும் ஒழுக்காற்றற் கோட்பாடானது, ஒரு மாணவருக்கு, அவன் அல்லது அவளின் தெரிவுகளின் மூலம் கற்பதற்கு உதவி, அவரின் நடத்தையைக் கருத்தில்கொள்வதற்கு ஒரு தலைமையாசிரியருக்கு பல்வேறான தேர்வுகளிலிருந்து ஒன்றைத் தேர்ந்தெடுப்பதற்கு அனுமதியளிக்கின்றது. இதன் சில உதாரணங்கள் பின்வருமாறு: ஒரு வேதனையேற்படுத்தும் அல்லது அவமரியாதையான வார்த்தையிற்கு மன்னிப்பு கேட்டல், மாணவருக்கான எதிர்ப்பார்ப்புகளின் மீளாய்வு அல்லது பெற்றோர்களுடன் ஒரு சந்திப்பு. மாணவர்கள் பாடசாலையிலிருந்து தற்காலிக நிறுத்தத்திற்கும் ஆளாகலாம். இவ்விதிமுறைகள் ஆரம்ப மற்றும் நடுநிலை மாணவர்கள் இரு சார்பாரிற்கும் பொருந்துகின்றது.

முற்போந்துசெல்லும் ஒழுக்காற்றம் ஆனது, மாணவர்களின் நேரிய நடத்தையையும், பாடசாலை மற்றும் பாடசாலை-சம்பந்தப்பட்ட செயற்பாடுகளிலும் பாதுகாப்பற்ற அல்லது தகாத நடத்தையை தடுப்பதற்கும், தகாத நடத்தை மிகையாகுமுன் அதை தடுப்பதற்கும் உதவுகின்றது.

# சீண்டுதல்
## இதனை நிறுத்துவதற்கு நாம் யாவரும் உதவலாம்.

### எனது இளம்பிள்ளையோ பதின்மவயதினரோ சீண்டப்படுவதை நான் எப்படி அறிந்து கொள்வது?

“சீண்டுதல்” என்ற வார்த்தையை ஒரு இளம்பிள்ளை அறியாதிருக்கலாம்; ஆயினும் தன்னுடன் ஒருவர் கடுமையாக இருப்பதையோ, துன்புறுத்துவதையோ அல்லது தன்னை அச்சம் கொள்ளவோ, துயரம் கொள்ளவோ செய்வதை உணரக்கூடிய தன்மையை அவர் கொண்டுள்ளார். அதைப்பற்றி உங்களிடம் கூறாத போதும் உங்கள் பிள்ளை சீண்டப்படுவதற்கான அறிகுறிகள் இருக்கின்றன. உங்களுக்கு பிள்ளை கூறாதிருக்க காரணம், அவ்வாறு “கூறுவதால்” அல்லது “கோள் சொல்வதால்” நிலைமையை தான் மோசமடையச் செய்யலாம் என்ற கவலையாக இருக்கலாம்.

உங்கள் பதின்மவயதினரும் பிரச்சனை இருப்பதை உங்களுக்கு கூறாதிருக்கலாம். அந்நடத்தையை விபரிக்க “சீண்டுதல்” என்பதைவிட “தொந்தரவு” எனும் வார்த்தையை அவர் உபயோகிக்கக்கூடும். பதின்மவயதினர் அநேகமாக விடயங்களை தாமே கையாள்வதை விரும்புவர் – ஏனெனில் அவர்கள் நீங்கள் கவலையடையக்கூடுமென எண்ணலாம், அல்லது பெற்றோரில் ஒருவர் தலையிடுவதால் சங்கோஜப்படலாம்.

அவள் அதைப்பற்றி பேசாவிடினும், உங்கள் பிள்ளை சீண்டப்படுகிறார் என்பதற்கு அறிகுறிகள் உள்ளன. உங்கள் பிள்ளை சீண்டப்படுவதை கூறும் வரை காத்திராமல் அதற்கான அறிகுறிகள் – நடத்தை, போக்கு, அல்லது தோற்றத்தில் மாற்றங்கள் – போன்றவற்றை நீங்கள் கவனிக்கலாம்.

சீண்டப்படும் சிறுவர்கள் பாடசாலைக்கு செல்வதை விரும்பாதிருக்கலாம் அல்லது பாடசாலை நடைபெறும் நாட்களில் அழலாம் அல்லது நோயுறலாம். மற்றைய பாடசாலை மாணவர்களுடனான செயற்பாடுகள் அல்லது சமூக நிகழ்வுகள் போன்றவற்றில் கலந்து கொள்வதை தவிர்க்கலாம். இவர்கள் திடீரென பணத்தை அல்லது சொந்த பொருட்களைத் தொலைக்கலாம், அல்லது கிழிந்த ஆடைகளுடனோ உடைந்த பொருட்களுடனோ வீட்டிற்கு வரலாம், மற்றும் அர்த்தமற்ற விளக்கங்களை அளிக்கலாம்.

சீண்டப்படும் அல்லது தொந்தரவுக்குள்ளாகும் பதின்மவயதினர் பாடசாலையை விட்டு விலகுவதைப்பற்றியும் பேசலாம், அத்துடன் மற்றைய பாடசாலை மாணவர்களுடனான செயற்பாடுகளைத் தவிர்க்க ஆரம்பிக்கலாம்.



“என்னிடமிருந்து விலகியிருங்கள். நீங்கள் வர முடியாது.”

## எனது பிள்ளை உடல்ரீதியாக புண்படாவிட்டால் அது சீண்டுதலாகுமா?

சீண்டுதல் பல வடிவங்களை எடுக்கக்கூடியது. இதில் அடங்கியன:

- **சரீரரீதியாக** – அடித்தல், தள்ளுதல், திருடுதல், அல்லது உடைமைகளை உடைத்தல்
- **வார்த்தைரீதியாக** – அவப்பெயர் சொல்லுதல், கேலி செய்தல், அல்லது பாலியல்ரீதியான, இனத்துவேச வார்த்தைகளை பாவித்தல்.
- **சமூகரீதியாக** – ஒரு குழுலிருந்து மற்றவர்களை ஒதுக்குதல், அல்லது அவர்களைப்பற்றி வீண்பேச்சு அல்லது வதந்தி பரப்புதல்
- **மின்னனு மூலம்** (பொதுவாக *cyberbullying* – சைபர் புலியிங் – இணையத்துாடு சீண்டுதல் என அறியப்படுவது) – மின்னஞ்சல், கைத்தொலைபேசிகள், சமூக ஊடக இணையதளங்கள் அல்லது கைத்தொலைபேசிச்செய்தி மூலம் வதந்தி பரப்புதல் அல்லது துன்புறுத்தல்.

## எனது பிள்ளை சீண்டப்படுகின்றார். நான் என்ன செய்ய வேண்டும்?

- உங்கள் பிள்ளை கூறுவதைக் கேட்டு அவர் பாதுகாப்பாக இருப்பதற்கான உரிமையைக் கொண்டுள்ளார் என்று நம்பிக்கையளியுங்கள்.
- உண்மைகளை தெளிவாக அறிந்து கொள்ளுங்கள். எப்போது என்ன நடந்தது என்பதைப்பற்றி குறிப்பெடுங்கள்.
- கோள் சொல்வதற்கும் அறியப்படுத்துவதற்கும் உள்ள வேறுபாட்டை உங்கள் பிள்ளை தெரிந்து கொள்ள உதவுங்கள். அறியப்படுத்துவதற்கு தைரியம் வேண்டும். அறியப்படுத்துவது இன்னொரு மாணவருக்குப் பிரச்சனை உண்டாக்குவதற்கல்ல, எல்லா மாணவர்களையும் பாதுகாக்கவேயாகும்
- உங்கள் பிள்ளையுடைய ஆசிரியர் அல்லது உங்கள் பிள்ளை நம்பிக்கை வைத்துள்ள வேறொரு ஆசிரியர், பாடசாலைத் தலைவர் அல்லது உப தலைவருடன் சந்திப்பதற்கு ஏற்பாடு செய்யுங்கள்.
- கடினமாக இருந்தபோதும் அமைதியாக இருக்க முயற்சிப்பதால் உங்கள் பிள்ளைக்கு ஆதரவு கொடுக்கவும் தகுந்த நடவடிக்கை எடுக்கத் திட்டமிடவும் நீங்கள் உதவலாம்.
- உங்கள் பிள்ளையின் நடத்தையைக் கவனியுங்கள். பாடசாலை ஊழியர்களுடனான சந்திப்புகளிற்கு பின்பும் சீண்டுதல் நிற்காவிடில் மீண்டும் சென்று பாடசாலை தலைமையாசிரியருடன் உரையாடுங்கள். சந்திப்பின் பொழுது சீண்டுதலை நிறுத்துவதற்கென ஏற்றுக்கொள்ளப்பட்ட படிமுறைகளை உறுதிப்படுத்துங்கள்.
- பாடசாலை முடிந்த பின் நடக்கும் நிகழ்வுகளின் போது அல்லது விளையாட்டுப் பயிற்சியின்போது சீண்டுதல் நடைபெறுகின்றதெனின் ஆசிரியருடன் அல்லது பயிற்சியாளருடன் பேசுங்கள்.
- சீண்டுதல் குற்றவியல் சம்பந்தப்பட்டதாயின், அதாவது பாலியல் வன்முறை, ஆயுதப்பாவிப்பு, அல்லது உங்கள் பிள்ளையின் பாதுகாப்பு பாடசாலையிலின்றி சமூகத்தில் அச்சுறுத்தப்படுவதாயின் போலிசாரிடம் முறையிடுங்கள்.

## நான் எப்படி ஈடுபடுவது?

- மன்றத்தின் சீண்டுதல் தடுப்பு மற்றும் தலையீட்டுக் கோட்பாட்டையும், பாடசாலையின் சீண்டுதல் தடுப்பு மற்றும் தலையீட்டுத் திட்டங்களையும் பார்வையிடக் கேளுங்கள்.
- உங்கள் பிள்ளையின் பாடசாலையிற்கான School Climate Survey (பாடசாலை சூழ்நிலை கருத்தாய்வு) இன் முடிவுகளைப் பார்வையிடக் கேளுங்கள். இந்த அனாமதேய கருத்தாய்வு, பாதுகாப்பைக் குறித்த மாணவர்களின் உணர்வுகளை மதிப்பிட பாடசாலைகளுக்கு உதவுவதுடன், சீண்டுதலை தடுத்து பாடசாலைகளை எவ்வாறு பாதுகாப்பானவையாக வைத்திருப்பது என்பதைக் குறித்து தீர்மானங்களை எடுக்க உதவுகின்றது. கருத்தாய்வுகள் இரண்டு வருடங்களுக்கு ஒரு தடவை பூர்த்திசெய்யப்படுதல் அவசியமாகும்.
- Safe Schools Team (பாதுகாப்பான பாடசாலைகள் குழு) இல் சேர்வதைப்பற்றி சிந்தியுங்கள். இக்குழு பாடசாலையில் பாதுகாப்பிற்கு பொறுப்பாகவுள்ளது; குறைந்தது ஒரு பெற்றார், அத்துடன் பாடசாலை அலுவலகர்கள், ஒரு மாணவர் (பொருந்திய வேளையில்) மற்றும் ஒரு சமூக பங்குதாரர் ஆகியோரை இக்குழு உள்ளடக்குகின்றது.

## சீண்டுதலை எதிர்க்கொள்ள என் பிள்ளைக்கு நான் எப்படி உதவுவது?

பாடசாலையுடன் சேர்ந்துழைப்பதன் மூலம் உங்கள் சிறுபிள்ளைக்கு அல்லது பதின்மவயதினருக்கு சீண்டுதலை கையாள்வதற்கு உதவி, நீங்கள் ஒரு முன்னோடியாக இருக்கின்றீர்கள்; அத்துடன் சீண்டுதல் தவறானது என்ற செய்தியையும் தெரிவிக்கின்றீர்கள். உங்கள் பிள்ளை எந்த வயதினரானாலும் உங்களுடன் உரையாடுவதற்கு ஊக்குவிப்பதுடன் பின்வரும் ஆலோசனைகளையும் கூறி உதவலாம்:

- அந்த இடத்தை விட்டு **விலகிச் செல்லுங்கள்.**
- **திருப்பி தாக்காதீர்கள்,** பதிலுக்கு பேசாதீர்கள், மின்னஞ்சலுக்கு மறுமொழி அனுப்பாதீர்கள்.
- உங்களுக்கு நம்பிக்கையான வயது வந்தவர் ஒருவரிடம் - ஒரு ஆசிரியர், தலைமையாசிரியர், பாடசாலை பேருந்து ஓட்டுனர், அல்லது போசனவறையின் மேற்பார்வையாளர் - **நடந்ததை கூறுங்கள்.**
- நீங்கள் தனிமையாக இருப்பதாக உணராமலிருக்க உங்கள் சகோதரர்களுடன் அல்லது நண்பர்களுடன் **இதைப்பற்றிப் பேசுங்கள்.**
- நீங்கள் பாதுகாப்பாக இல்லாது உணரும் இடங்களில் உங்களுடன் இருப்பதற்கு ஒரு **நண்பரை தேடிக்கொள்ளுங்கள்.**
- **Kids Help Phone (பிள்ளைகள் உதவி தொலைபேசி)** உடன் 1-800-668-6868 இல் தொடர்பு கொள்ளுங்கள், அல்லது அவர்களது இணையதளத்தை www.kidshelpphone.ca இல் அணுகுங்கள்.



"எனக்கு சுகமில்லை."
"என்னால் பாடசாலைக்கு போக முடியாது."

## எனது பிள்ளை மற்றவர்களை சீண்டுவது சாத்தியமாகுமா?

மற்ற பிள்ளைகளை சரீரரீதியாக சீண்டும் பிள்ளைகளும் காயங்கள், சிராய்ப்புகள், மற்றும் கிழிந்த ஆடைகளுடன் வீட்டிற்கு வரலாம். இவர்களிடம் திடீரென வழக்கத்தை விட அதிகமாக செலவழிப்பதற்கு பணமோ சாதாரணமாக வாங்கிக்கொள்ள முடியாத புதிய பொருட்களோ காணப்படலாம். அத்துடன் இவர்கள் மற்றைய மாணவர்களைப்பற்றி சண்டித்தனமாகப் பேசலாம்.

சீண்டும் பிள்ளைகள் சில சமயம் பாடசாலையில் போல வீட்டிலும் அவ்வாறு செய்வார்கள். உங்கள் சொந்த வீட்டிலேயே அவர்கள் பேச்சுக்களையும் நடவடிக்கைகளையும் அவதானியுங்கள். உங்கள் பிள்ளைகளில் ஒருவர் அவரது உடன்பிறப்பால் சீண்டுப்படும் அறிகுறிகள் உள்ளனவா?

ஒரு சிறுபிள்ளையின் அல்லது பதின்மவயதினரின் வாழ்வில் ஏற்படும் பெரிய மாற்றங்கள், குழப்பங்கள், அல்லது இழப்புகளின் விளைவாகவோ, அல்லது ஒரு நீடித்த காலப்போக்கிலோ, பிறரை சீண்டும் நடத்தை ஏற்படலாம். உங்கள் பிள்ளளைகளில் யாருக்காவது இவ்வாறான அனுபவம் அண்மையில் ஏற்பட்டதா?

உங்கள் வீட்டில் பிரச்சனைகளும் சச்சரவுகளும் எவ்வாறு கையாளப்படுகின்றன என்று சிந்தியுங்கள். நீங்கள் விடயங்களை நேரிய முறையில் பேசிக் கையாள்கின்றீர்களா? சீண்டுதலை அனுமதிக்காமலிருப்பதற்கான முக்கியமான முறை வன்முறையோ ஆத்திரமோ இல்லாமல் பிரச்சனைகளைச் சமாளிப்பது எப்படி என்று நீங்கள் சிறந்த முன்னுதாரணமாகவிருந்து உங்கள் பிள்ளைகளுக்குக் காட்டுவதால் ஆகும்.

சீண்டுதல் யாதென்பதை உங்கள் பிள்ளைகளுக்குச் சொல்வது முக்கியமானதாகும். சீண்டுதலின் பல்வேறான வடிவங்களை விவரித்து, அது புண்படுத்துவது என்றும் அபாயகரமானதென்றும் விளங்கப்படுத்துங்கள். சீண்டுதல் தவறானது என்பதையும், அது எத்தகைய சந்தர்ப்பங்களிலும் அனுமதிக்கப்படமாட்டாதவொரு நடத்தை என்பதையும் உங்கள் பிள்ளைக்குத் தெளிவுபடுத்துங்கள்.

## சீண்டுதலையும் மற்றைய சம்பவங்களையும் பாடசாலைகள் கையாளும் விதத்தில் மாற்றமடைந்துள்ளது என்ன?

பாடசாலைச் சூழலில் எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்தும் தகாத அல்லது அவமரியாதையான நடத்தையை மாணவர்களுடன் நேரடியாகப் பணிபுரியும் பாடசாலை அலுவலகர் எதிர்கொள்வது அவசியமாகும். சீண்டுதல், இனத்துவேச அல்லது பாலியல்ரீதியான வார்த்தைகள், அல்லது பொருட்களை சேதம்செய்தல் ஆகியவற்றை இது உள்ளடக்கின்றது.

பாடசாலையிலிருந்து தற்காலிகமான நிறுத்தத்தை ஏற்படுத்தவல்ல சீண்டித்துன்புறுத்தல் போன்ற நடத்தைகளை அல்லது பாடசாலையிலிருந்து நிரந்தரமான நிறுத்தத்தை ஏற்படுத்தக்கூடிய பாரதூரமான சம்பவங்களை அனைத்து பாடசாலை அலுவலகர்களும் தலைமையாசிரியரிடம் முறையிடுதல் அவசியமாகும்.

இத்தகைய சம்பவங்களிற்கு ஆளாக்கப்பட்ட மாணவர்களின் பெற்றோர்களுடன் தலைமையாசிரியர் தொடர்புகொண்டு, அவர்களுக்கு கீழ்வருவனவற்றை அறிவித்தல் அவசியமாகும்:

**a)** மாணவரைப் புண்படுத்திய செயற்பாட்டின் தன்மை
**b)** மாணவருக்கு ஏற்பட்ட தீங்கு
**c)** மாணவரின் பாதுகாப்பை பேணுவதற்கு எடுக்கப்பட்ட படிகள், அந்நடத்தைக்குப் பிரதிவினையாக எடுக்கப்பட்ட ஒழுக்காற்று நடவடிக்கைகள் உட்பட

பாடசாலையில் சம்பவங்களை எவ்வாறு அலுவலகர்கள் கையாள்கின்றனர் என்பதைக்குறித்த மேலதிக தகவல்களுக்கு, www.ontario.ca/safeschools ஆன அமைச்சின் இணையதளத்தில் "Reporting and Responding" (அறிக்கையளித்தல் மற்றும் மறுதளித்தல்) பகுதியைப் பார்வையிடுங்கள்; அல்லது பாடசாலையினூடாக கிடைக்கக்கூடிய வேறு சேவைகளைப் பற்றி அறிவதற்கு தலைமையாசிரியருடன் பேசுங்கள்.

## ஆண்பிள்ளைகளும் பெண்பிள்ளைகளும் ஒரே மாதிரியாகவா சீண்டுகின்றார்கள்?

ஆண்பிள்ளைகள் பெண்பிள்ளைகள் இருவருமே சீண்டுபவர்களாக இருக்கலாம்.
ஆண்பிள்ளைகள் சரீரரீதியாக சீண்டுபவர்களாக இருக்கும் சமயம், பெண்பிள்ளைகள் பொதுவாக மறைமுகமான முறைகளை கையாள்வார்கள்; உதாரணமாக சகமாணவர்களைப்பற்றி வம்பு பேசுவது அல்லது அவர்களை குழுக்களிலிருந்தோ நிகழ்வுகளிலிருந்தோ ஒதுக்குவதன் மூலம் அவர்களை தனிமைப்படுத்துவது. ஆண்பிள்ளைகள் வழக்கமாக மற்றைய ஆண்பிள்ளைகளால் சீண்டுப்படும் சமயம், பெண்பிள்ளைகள் ஆண், பெண்பிள்ளைகள் இருவராலுமே சீண்டப்படுகின்றார்கள்.

எந்த வடிவிலிருந்தாலும் சீண்டுதல் அனுமதிக்கப்பட முடியாததொன்றாகும்.



"நான் கடந்து செல்லும்போது அவர்கள் இரகசியமாக பேசிக் கொள்கிறார்கள்...என்னுடன் இனிமேல் பேச வேண்டாம் என்று என் நண்பர்களிடம் கூறினார்கள்"

## எனது பிள்ளை சீண்டப்படுகின்றார் எனின், பாடசாலையிலிருந்து நான் என்ன எதிர்ப்பார்க்கலாம?

- உங்கள் பிள்ளை சீண்டப்படுகின்றார் என்பதை அலுவலகர்கள் அறிந்திருப்பின், பாடசாலை உங்களுடன் தொடர்புகொள்ளும் என்பதை நீங்கள் எதிர்ப்பார்க்கலாம்.
- உங்கள் பிள்ளையின் ஆசிரியர் அல்லது அவர் நம்பிக்கை வைத்துள்ள மற்றொரு ஆசிரியர் பிரச்சனையை தீர்த்து வைக்கலாம்; அல்லது உங்கள் பிள்ளைக்கு எத்தகைய உதவி தேவை என்பதற்கான யோசனையை கூறலாம். சீண்டுதலை தடுக்கும் முறைக்கான பயிற்சி ஆசிரியர்களுக்கும் தலைமையாசிரியர்களுக்கும் அளிக்கப்பட்டுள்ளது.
- பாடசாலை மூலம் பெற்றுக்கொள்ள கூடிய சேவைகளை பற்றி மேலும் அறிந்து கொள்ள விரும்பினால் நீங்கள் தலைமையாசிரியருடன் பேசலாம்.
- சீண்டுதலை தடுக்கும் செய்முறையின் ஒரு அம்சமாக ஆசிரியர்கள் சீண்டுதலைப்பற்றி பகிரங்கமாக வகுப்பில் கலந்துரையாடுவதன் மூலம் மரியாதை, மற்றவர்களின் உணர்வுகளை மதித்தல், நட்பு ஆகியனவற்றின் முக்கியத்துவத்தை மாணவர்கள் புரிந்து கொள்ள உதவலாம்.
- மாணவர்கள், ஆசிரியர்கள், மற்றும் பாடசாலை சமூகத்தின் மற்றைய அங்கத்தவர்கள், ஒருவருடன் ஒருவர் எவ்வாறு நடந்து கொள்வது என்பது பற்றிய பாடசாலையின் நடத்தை நியதிகளை பார்வையிடுவதற்கு கேளுங்கள்.
- உங்கள் பாடசாலையின் சீண்டுதல் தடுப்புக் கொள்கையைப் பார்வையிடுவதற்கு கேளுங்கள். இக்கொள்கையானது இந்த பிரச்சினையை தீர்ப்பதற்கு பாடசாலை ஊழியர்கள் என்ன செய்யலாம் என்று குறிப்பாக விபரிக்கின்றது.
- உங்கள் கவலைகளை முழுமையாக விசாரிக்க எல்லா முயற்சியையும் எடுக்கும் சமயம் பாடசாலை ஊழியர்கள் மாணவர்களின் அந்தரங்கத்தை உறுதிப்படுத்தவும் எதிர்ப்பார்க்கப்படுவர்.
- ஒரு நியாயமான காலகட்டத்தின் பின்னரும் பாடசாலையின் பிரதிவினை உங்களுக்கு திருப்தியளிக்காவிடில் பாடசாலை நிர்வாகசபையின் மேற்பார்வையதிகாரியுடன் நீங்கள் தொடர்பு கொள்ளலாம்.

## எனது பிள்ளையாவது சீண்டுதலில் ஈடுபடாமலிருக்கிறாரே...

சீண்டுதல் நடக்கும்போது எல்லோருமே துன்பப்டுகின்றார்கள், அத்துடன் இதை தடுப்பதற்கு எல்லோருமே உதவலாம். 85 விகிதமான சந்தர்ப்பங்களில், சாட்சிகளின் முன்னாலேயே சீண்டுதல் நடக்கின்றது. சீண்டுதலுக்கு தாமே இலக்காகக்கூடும் அல்லது அதற்கு இலக்காகுபவர்களின் நிலைமையை மேலும் மோசமடைய செய்யக்கூடும் என்ற அச்சத்தால் பார்த்துக்கொண்டிருப்பவர்கள் அனேகமாக குறுக்கிடாமலிருப்பார்கள்.

சீண்டுதல் ஏற்றுக்கொள்ளப்படாததொன்று என்றும் ஒரு வயதுவந்தவரிடம் தெரியப்படுத்துவதால் தடுக்க உதவலாம் என்றும் உங்கள் பிள்ளை புரிந்துக்கொள்ள நீங்கள் உதவலாம்.

## சீண்டுதல் எத்தகைய ஒரு பாரிய பிரச்சனையாகும்?

சீண்டுதல் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளப்பட முடியாததாகும். வளர்ச்சியின் பகுதியொன்றாக சீண்டுதல் ஒருபோதும் கருதப்படக்கூடாது. ஆராய்ச்சியும் அனுபவமும் தொடர்ந்தும் காட்டுவது என்னவெனில் சீண்டுதல் ஒரு முக்கியமான பிரச்சினையென்பதும் அதனுடன் தொடர்புள்ள மாணவர்கள், குடும்பங்கள், சமூகத்தில் சமநிலையிலுள்ளவர்கள், அவர்களை சுற்றியுள்ள சமூகம் ஆகியவற்றிற்கு அதன் விளைவுகள் பாரதூரமானவையென்பதுமாகும்.

மற்றவர்களை சீண்டும் பிள்ளையாகவோ, துன்புறுத்தப்படும் பிள்ளையாகவோ, இவற்றில் இரண்டுமாகவோ, Ontario (ஒன்டேரியோ) இல் பல பிள்ளைகளும் இளைஞர்களும் சீண்டுதலில் தொடர்புபட்டுள்ளனர். இப்பிள்ளைகள் பலவாறான உணர்வுரீதியான, நடத்தைரீதியான, உறவுரீதியான பிரச்சினைகளுக்கு அபாயகட்டத்தில் இருக்கின்றனர்; இவர்களுக்கு பாடசாலையில் மட்டுமல்லாமல் வாழ்க்கை பூராகவும் ஆரோக்கியமான உறவுகளை ஏற்படுத்திக்கொள்ள பெரியோர்களின் ஆதரவு தேவைப்படுகின்றது.

சீண்டப்படும் மாணவர்கள் அனேகமாக சமூக அவதி, தனிமை, ஒதுங்கியிருத்தல், உடல்ரீதியான சுகவீனங்கள், தாழ்வு மனப்பான்மை ஆகியவற்றுக்காளாவார்கள். அத்துடன் காரணமற்ற பயங்கள், முரட்டுத்தனமான நடத்தை அல்லது மனவழுத்தம் போன்றவற்றையும் அவர்கள் எதிர்நோக்க நேரிடும். அத்துடன் அவர்கள் காரணமற்ற பயங்கள், முரட்டுத்தனமான நடத்தை அல்லது மனவழுத்தம் போன்றவற்றையும் தோற்றுவிக்கக்கூடும். சில மாணவர்களிடம் பாடசாலைக்குச் செல்லாமை, தேர்வுப் புள்ளிகளில் வீழ்ச்சி, அல்லது பாடசாலையை விட்டு முற்றாக விலகுவது போன்றவற்றைக் காணலாம்.

சீண்டுதலை செய்யும் மாணவர்களின் பாதையும் கரடுமுரடானதாகும். மற்றவர்களை புண்படுத்த பலாத்காரத்தையும் முரட்டுத்தனத்தையும் உபயோகிக்கும் சிறுவர்களும் பதின்மவயதினர்களும் சரியெது பிழையெது என்று பொதுவாகவே கருத்தில்கொள்ள மாட்டார்கள். இறுதியில் இவர்கள் நெறியற்ற பெரியோராக மாறக்கூடும்.

**மூன்றில் ஒரு பங்கு மாணவர்கள் பாடசாலையில் சீண்டுதலை அனுபவிக்கின்றனர்; அத்துடன் நான்கில் ஒரு பங்கினராவது வேறொருவரை சீண்டியிருப்பதாக கூறுகின்றனர்.**

Centre for Addiction and Mental Health (மனநிலை சுகாதார மையம்), 2009

## நாம் எவ்வாறு Ontario (ஒன்டேரியோ) இன் பாடசாலைகளில் பாதுகாப்பை அதிகரிக்க உதவுகின்றோம்?

மாணவர்கள் பள்ளியில் வெற்றிகாண்பதற்கு, ஒரு நேர்மறையான பாடசாலை சூழ்நிலையும் பாதுகாப்பான கற்றல் மற்றும் கற்பித்தற் சுற்றாடலும் அத்தியாவசியமானதாகும்.

பின்வருவனவற்றைப் பற்றி மேலும் அறியுங்கள்:

- ***Safe Schools Strategy* (பாதுகாப்பான பாடசாலை வினைமுறை)**
  இந்த விரிவான வினைமுறையானது, ஒவ்வொரு பாடசாலையிலும் சீண்டுதல் தடுப்பு திட்டம், பாடசாலை வளங்கள், ஆசிரியர்களிற்கும் தலைமையாசிரியர்களிற்கும் பயிற்சி, மற்றும் Kids Help Phone (பிள்ளைகள் உதவி தொலைபேசி) உடன் ஒருங்கிணைப்பு ஆகியவற்றை உள்ளடிக்கியுள்ளது.
- **ஒழுக்கத்திற்கான Ontario (ஒன்டேரியோ) இன் புதிய அணுகுமுறை**
  "முற்போந்த ஒழுக்கம்" முழு பாடசாலையையும் ஈடுபடுத்தி ஒரு நேரிய பாடசாலை சூழ்நிலையை வளர்க்கின்றது. தகாத மாணவரது நடத்தைகளிற்கு பொருத்தமான விளைவுகளை தேர்ந்தெடுப்பதற்கு தலைமையாசிரியரிற்கு வழிவகுப்பதுடன், நன்நடத்தையை மேம்படுத்த உதவும் பற்பல துணைகளை மாணவர்களிற்கு வழங்குகின்றது. இந்த கோட்பாடு ஆனது, கோட்பாடு/திட்டக் குறிப்பாணை 145 இல் விவரமாக விளக்கப்பட்டுள்ளது
- **நடத்தைக் கோட்பாடு**
  Ontario (ஒன்டேரியோ) இன் நடத்தைக் கோட்பாட்டிற்கு எங்கள் வழிகாட்டியானது, மாணவர்கள், பெற்றோர்கள், பாடசாலை ஊழியர்கள், மற்றும் சமூக பங்குதாரர்கள் உட்பட பாடசாலை சமூகத்திலுள்ள எல்லோருடைய பங்கையும் பொறுப்புகளையும் விளக்குகின்றது.
- **சீண்டுதல் தடுப்பு மற்றும் தலையீடு**
  கோட்பாடு/திட்டக் குறிப்பு 144 ஆனது, பாடசாலை மன்றங்களிடமிருந்து சீண்டுதல் தடுப்பு மற்றும் தலையீட்டைப்பற்றியுள்ள எதிர்ப்பார்ப்புகளை விளக்குகின்றது.
- ***Bullying Awareness and Prevention Week* (சீண்டுதல் விழிப்புணர்வு மற்றும் தடுப்பு வாரம்)**
  இந்த விடயத்தை மையமாக்கி பாதுகாப்பான கற்றற் சூழலொன்றை விருத்திசெய்வதற்கு பாடசாலைகளை ஊக்குவிப்பதற்கென, ஒவ்வொரு கார்த்திகை மாதத்தின் மூன்றாம் வாரத்தை Ontario (ஒன்டேரியோ) ஒதுக்கிவைத்துள்ளது.

- ***Premier's Safe Schools Awards* (பிரதமரின் பாதுகாப்பான பாடசாலைகள் விருதுகள்)**
  பாதுகாப்பான மற்றும் உள்ளடங்கலான பாடசாலை சூழலை உருவாக்குவதில் அசாதாரணமான, ஆக்கபூர்வமான வேலையை செய்திருக்கும் பாதுகாப்பான பாடசாலைகள் குழுக்களில் குறைந்தது 10 ஐ இந்த விருது அடையாளங்காண்கின்றது.
- ***School Climate Survey for Parents* (பெற்றோருக்கான பாடசாலை சூழ்நிலை கருத்தாய்வு)**
  இந்த கருத்தாய்வு 22 மொழிகளில் கிடைக்கப்பெறும்.
  **www.edu.gov.on.ca/eng/safeschools/climate.html**
- ***Kids Help Phone* (பிள்ளைகள் உதவி தொலைபேசி)**
  இந்த நம்பகமான ஆலோசனை வழங்கும் சேவை 24/7 பெறக்கூடியதாகும். **www.kidshelpphone.ca** ஐ அணுகுங்கள் அல்லது **1-800-668-6868** இனை அழையுங்கள்.

## இப்பிரசுரிப்பின் மேலதிக பிரதிகள் தேவையா?

இது 22 மொழிகளில் பெறக்கூடியதாகும். கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பாதுகாப்பான பாடசாலைகள் இணையதளத்தில் பெறுங்கள்; அல்லது Service Ontario Publications இலிருந்து அச்சடிக்கப்பட்ட பிரதிகளைப் பெறுங்கள்.

***www.serviceontario.ca/publications***

மேலதிக தகவல்களுக்கு அணுகுங்கள்:

***www.ontario.ca/safeschools***

♻ இப்பதிப்பு மறுபயன்பாடு காகிதத்தில் அச்சிடப்பட்டது
© Queen's Printer for Ontario, 2011
Tamil

ISBN 978-1-4249-9173-0 (Print)
ISBN 978-1-4249-9174-7 (PDF)